# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2025**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 01-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | முருகம்மாள் | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | மணிவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | நல்லமுடி எஸ்டேட் | வயது | - | 45/2026 |
| சாதி | - | | | | |

**20-01-2026**

**( எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் 359 BNSS-ன் கீழான சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டு சாட்சி விசாரிக்கப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. காலை சுமார் 10.00 மணியளவில் வால்பாறையில் உள்ள பாரத் வங்கியில் ATM-ல் பணம் எடுப்பதற்காக சென்றேன். கணக்கில் பாக்கி தொகை சரிபார்ப்பதற்காக அங்கு இருந்த நபரிடம் எனது ATM அட்டையை கொடுத்தேன். அந்த நபர் ATM மிசினை பார்த்து விட்டு பணம் இல்லை என்று கூறி ATM அட்டையை திருப்பி கொடுத்துவிட்டார். நான் வீட்டிற்கு சென்றுவிட்டு மாலை 06.00 மணியளவில் நான் குடியிருக்கும் பகுதியில் உள்ள கடையில் எனது ATM அட்டையை கொடுத்து வங்கி கணக்கில் பணம் எவ்வளவு இருக்கு என்று பார்ப்பதற்காக கொடுத்தேன். அவர் பணம் இல்லை என்று கூறி ATM அட்டையை கொடுத்துவிட்டார். மறுநாள் நான் வங்கிக்கு சென்று எனது ATM அட்டையை கொடுத்து வங்கி பாக்கி தொகையை பார்ப்பதற்காக கொடுத்த போது, வங்கி ஊழியர் அந்த ATM அட்டை என்னுடைய பெயரில் இல்லை என்றும், வேறு ஒரு நபர் பெயரில் இருப்பதாக தெரிவித்தார். எனது வங்கி கணக்கில் இருந்து ரூ.9,000/-ம் எடுக்கப்பட்டிருப்பதாக வங்கி ஊழியர் தெரிவித்தார். அதன் அடிப்படையில் நான் வால்பாறை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம்

காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எனது வங்கி கணக்கில் இருந்து யார் பணம் எடுத்தது என்று தெரியவில்லை. நான் ATM அட்டையை கொடுத்த நபரை பார்த்தால் அடையாளம் சொல்ல இயலாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

1. கடந்த 07.11.2024-ம் தேதி காலை நேரத்தில் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்துவிட்டு, காலை 10.00 மணியளவில் எனது SBI வங்கி கணக்கில் இருப்பு தொகை சரிப்பார்ப்பதற்காக SBI ATM-ற்கு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ATM கார்டை பயன்படுத்த தெரியாததால் நான் வழக்கமாக அங்கிருக்கும் செக்யூரிட்டி மூலம் பணம் எடுப்பேன் என்றும், அன்றைய தினம் செக்யூரிட்டி இல்லாததால் ATM-ற்கு வெளியே 30 முதல் 35 வயது வரை மதிக்கத்தக்க நபர் நின்று கொண்டிருந்தார் என்றும், நான் அவரிடம் எனது ATM கார்டை கொடுத்து பணம் எடுக்க உதவி கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அப்போது அந்த நபரிடம் எனது ATM கார்டு மற்றும் ATM கார்டு பின் ஆகியவற்றை சொல்லி எனது வங்கி கணக்கில் இருப்பு தொகையை பார்க்க சொல்லி கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த நபர் ATM கார்டை பயன்படுத்திவிட்டு, வங்கி கணக்கில் பணம் இல்லை என்று சொல்லி ATM கார்டை திருப்பி தரும் போது கீழே தவறவிட்டு, அதை எடுத்து தருவதாக குனிந்து வேறு ஒரு கார்டை எடுத்து என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது ATM கார்டு என்று நம்பி எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் 19.11.2024-ம் தேதி எனது வங்கி கணக்கில் பணம் எதுவும் போடப்பட்டுள்ளதா என்று குறுஞ்செய்தி வந்துள்ளதா என்று எனது செல்போனில் பார்க்க சொல்லி எனது மகன் விக்னேஷிடம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் செல்போனை பார்த்துவிட்டு, எனது வங்கி கணக்கில் இருந்து ரூ.9,000/-த்தை 07.11.2024-ம் தேதி எடுத்துள்ளதாக குறுந்தகவல் வந்துள்ளதாக கூறினார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நான் என் மகனிடம் நான் பணம் எதுவும் எடுக்கவில்லை என்றும், எனது பர்சில் உள்ள ATM கார்டை பார்த்த போது அந்த ATM கார்டு ஜெயசந்திரன் என்ற பெயரில் இருந்ததுஎன்று சொன்னால் சரியல்ல. பின்னர் கடந்த 07.11.2024-ம் தேதி வால்பாறையில் உள்ள SBI ATM-யில் பணம் எடுக்க எனக்கு ஒரு நபர் உதவி செய்வது போல் என்னை ஏமாற்றி எனது ATM கார்டை அவர் வைத்துக்கொண்டு வேறு ஒரு ATM கார்டை என்னிடம் கொடுத்துவிட்டு

என்னுடைய ATM கார்டை வைத்து வேறு ஒரு ATM-யில் என்னுடைய கார்டை பயன்படுத்தி எனது வங்கி கணக்கில் இருந்து ரூ.9,000/-ம் பணத்தை எடுத்து என்னை ஏமாற்றி மோசடி செய்துவிட்டதாக உணர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் இது சம்பந்தமாக எனது ATM கார்டையும், பணத்தையும் மீட்டு தருமாறு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும், அதன் அடிப்படையில் போலீசார் விசாரணை செய்து கேரளா மாநிலத்தை சேர்ந்த ஒரு நபரை வால்பாறை காவல் நிலைய போலீசார் கைது செய்து வைத்திருப்பதாக கேள்விப்பட்டு காவல் நிலையம் சென்று பார்த்த போது, என்னிடம் ATM கார்டை ஏமாற்றி கொடுத்து மோசடி செய்த நபர் ஆஜர் எதிரி தான் எனவும், அவரிடமிருந்த என்னுடைய ATM கார்டை அடையாளம் காட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டு, எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u> இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2025**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.02 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | மாணவர் |
| பெயர் | - | விக்னேஷ் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | மணிவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | ஜோதி நகர், பொள்ளாச்சி | வயது | - | 22/2026 |
| சாதி | - | | | | |

**20-01-2026**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, பொள்ளாச்சி தனியார் கல்லூரியில் 2-ம் ஆண்டு படித்து வருகிறேன். அ.சா.1 முருகம்மாள் எனது அம்மா ஆவார். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. மாலை 04.00 மணிக்கு போன் செய்து, தனது வங்கி கணக்கில் பணம் இருப்பதாகவும், அதை ATM மூலம் எடுக்க முடியவில்லை என்று கூறினார். நான் அதற்கு ATM கார்டை வங்கியில் சென்று விசாரிக்குமாறு கூறினேன். எனது அம்மா வங்கியில் சென்று விசாரித்த போது, அவரது வங்கி கணக்கில் பணம் எதுவும் இல்லை என்றும், அனைத்து பணமும் எடுக்கப்பட்டுவிட்டனர் என்றும், வேறுயாரிடமாவது பணத்தை கொடுத்தீர்களா என்று எனது அம்மாவிடம் கேட்ட போது, எனது அம்மா யாரிடமும் கொடுத்ததாக நினைவில்லை என்று கூறினார். நான் நாளை வந்து பார்ப்பதாக கூறினேன். நான் வந்து கேட்ட போது, எனது அம்மா யாரிடம் ATM கார்டை கொடுத்தேன் என்று தெரியவில்லை என்று கூறினார். இது சம்பந்தமாக நானும் எனது அம்மாவும் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 07.11.2024-ம் தேதி காலை 10.00 மணியளவில் எனது அம்மா SBI வங்கி கணக்கில் இருப்பு தொகை சரிப்பார்ப்பதற்காக SBI ATM-ற்கு சென்றார் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாவுக்கு ATM கார்டை பயன்படுத்த தெரியாததால் அவர் வழக்கமாக அங்கிருக்கும் செக்யூரிட்டி மூலம் பணம் எடுப்பார் என்றும், அன்றைய தினம் செக்யூரிட்டி இல்லாததால் ATM-ற்கு வெளியே 30 முதல் 35 வயது வரை மதிக்கத்தக்க நபர் நின்று கொண்டிருந்தார் என்றும், எனது அம்மா அவரிடம் அவரது ATM கார்டை கொடுத்து பணம் எடுக்க உதவி கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது அந்த நபரிடம் தனது ATM கார்டு மற்றும் ATM கார்டு பின் ஆகியவற்றை சொல்லி தனது வங்கி கணக்கில் இருப்பு தொகையை பார்க்க சொல்லி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த நபர் ATM கார்டை பயன்படுத்திவிட்டு, வங்கி கணக்கில் பணம் இல்லை என்று சொல்லி ATM கார்டை திருப்பி தரும் போது கீழே தவறவிட்டு, அதை எடுத்து தருவதாக குனிந்து வேறு ஒரு கார்டை எடுத்து என் அம்மாவிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மா தனது ATM கார்டு என்று நம்பி எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டார். பின்னர் 19.11.2024-ம் தேதி எனது அம்மாவின் வங்கி கணக்கில் பணம் எதுவும் போடப்பட்டுள்ளதா என்று குறுஞ்செய்தி வந்துள்ளதா என்று தனது செல்போனில் பார்க்க சொல்லி என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் செல்போனை பார்த்துவிட்டு, எனது அம்மாவின் வங்கி கணக்கில் இருந்து ரூ.9,000/-த்தை 07.11.2024-ம் தேதி எடுத்துள்ளதாக குறுந்தகவல் வந்துள்ளதாக கூறினேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் எனது அம்மா, என்னிடம் தான் பணம் எதுவும் எடுக்கவில்லை என்றும், தனது பர்சில் உள்ள ATM கார்டை பார்த்த போது அந்த ATM கார்டு ஜெயசந்திரன் என்ற பெயரில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. பின்னர் கடந்த 07.11.2024-ம் தேதி வால்பாறையில் உள்ள SBI ATM-யில் பணம் எடுக்க தனக்கு ஒரு நபர் உதவி செய்வது போல் தன்னை ஏமாற்றி தனது ATM கார்டை அவர் வைத்துக்கொண்டு வேறு ஒரு ATM கார்டை தன்னிடம் கொடுத்துவிட்டு தன்னுடைய ATM கார்டை வைத்து வேறு ஒரு ATM-யில் தன்னுடைய கார்டை பயன்படுத்தி தனது வங்கி கணக்கில் இருந்து ரூ.9,000/-ம் பணத்தை எடுத்து தன்னை ஏமாற்றி மோசடி செய்துவிட்டதாக உணர்ந்தார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் இது சம்பந்தமாக தனது ATM கார்டையும், பணத்தையும் மீட்டு தருமாறு காவல் நிலையத்தில் எனது அம்மா புகார் அளித்தார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு,

**தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>: இல்லை**

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, **B.A., B.L.,** )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2025**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 03-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | ரஜேஸ்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | முருகன் | சமயம் | - | |
| கிராமம் | - | நல்லமுடி எஸ்டேட் | வயது | - | 25/2026 |
| சாதி | - | | | | |

<u>20-01-2026</u>

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வால்பாறை காய்கறி கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முருகம்மாள் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. ( அந்த பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) மேற்படி கையொப்பத்தை நான் வால்பாறை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். அ.சா.1-ன் பணம் காணாமல் போனது சம்பந்தமாக போலீசார் என்னை அழைத்து கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. கடந்த 19.11.2024-ம் தேதி 21.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய குற்ற எண்.136/2024 வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவயிடமான வால்பாறை SBI ATM செண்டர் அருகில் விசாரணை செய்து கொண்டிருந்தபோது, நானும், முனியாண்டி என்பவரும் நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், முனியாண்டியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>: இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.